සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
*All Rights Reserved*

**බස්නාහිර පළාත්අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව**
**மேல் மாகாணக் கல்வித்திணைக்களம்**
**Department Of Education – Western Province**

**පළමුවනවාරඇගයීම**
**முதலாம் தவணைபரீட்சை -2018**
**First Term Evaluation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் 09 / Grade | විෂයය / பாடம் / Subject – கணிதம் | පත්‍රය / வினாத்தாள் / Paper – I, II | කාලය / காலம் / Time – 2 மணி. |

பெயர்:-........................................................ சுட்டெண்:-....................

## பகுதி I

- 1 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு இத்தாளிலேயே விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவிற்கும் 2 புள்ளிகள் வழங்கப்படும்.

**01.** கீழேயுள்ள விற்பனைகள் தொடர்பாக இலாபகரமான விற்பனையின் கீழ் கோடிடுக.

**(a)** ரூ 300 பெறுமதியான சிறுவர் உடையினை ரூ360 இற்கு விற்பனை செய்தல்.

**(b)** ரூ 400 பெறுமதியான மேற்சட்டையை ரூ 460 இற்கு விற்பனை செய்தல்.

**02.** எண் கோலமொன்றின் பொது உறுப்பு $5n - 4$ ஆகும். இக் கோலத்தின் 7ஆம் உறுப்பைக் காண்க.

**03.** எண் சட்டத்தில் குறிக்கப்பட்ட துவித எண்ணை தசம எண்ணாகத் தருக.




**04.** $1\frac{1}{2}$ மணித்தியாலத்தின் $\frac{2}{5}$ ஐக் காண்க.

**05.** $P = \frac{1}{2}$, $q = \frac{-1}{3}$ எனில் $8p - 6q$ இன் பெறுமானத்தைக் காண்க.

**06.** தரப்பட்ட உருவில் AB ஓர் நேர்கோடு எனில், $x$ இன் பருமனைக் காண்க




**07.** சுருக்குக. $\frac{1}{3} + \frac{1}{4} - \frac{1}{2}$

**08.** ரூ 1 200 000 பெறுமதியான மோட்டார் வாகனம் ஒன்றை விற்பனை செய்யும் போது ரூ 96000 தரகுப் பணமாகச் செலுத்தப்படுகிறது. கொடுக்கப்பட்ட தரகுச் சதவீதத்தைக் காண்க.

**09.** காரணி காண்க. $2x^2y + 6xy^2$

**10.** சுருக்குக. $5(x + y) - (x - y)$

**11.** உருவில் XY = XZ உம் XZ = YZ உம் ஆகும். XY = 8 cm எனில், முக்கோணி XYZ இன் சுற்றளவைக் காண்க.




**12.** வீட்டுப் பொருட்களை ரூ 81 000 இற்கு விற்பதனால் 8% இலாபம் கிடைக்கின்றது எனில், அதன் கொள்விலையைக் காண்க.

**13.** $7x - 2 = 12$ ஐ தீர்த்துப் பெறுமானம் காண்க.

**14.** கீழே தரப்பட்ட தீக்குச்சிகளால் அமைக்கப்பட்ட கோலம் ஒன்றில் 12ஆம் சந்தர்ப்பத்தை அமைப்பதற்குத் தேவையான தீக்குச்சிகளின் எண்ணிக்கையைக் காண்க.



**15.** சுருக்குக $3\frac{1}{4} \div 1\frac{1}{2}$

**16.** காரணிகள் பற்றிய அறிவைப் பயன்படுத்தி $98^2 - 2^2$ இன் பெறுமானத்தைக் காண்க.

**17.** உருவில் AB // CD எனில், $x$ இன் பெறுமானத்தைக் காண்க.




**18.** அடிப்பரப்பளவு $200\ cm^2$ ஐக் கொண்ட கனவுரு வடிவான பாத்திரத்தில் 1.8 $l$ நிரப்பப்பட்டுள்ளது எனில், நீர் மட்ட உயரத்தை சென்ரிமீற்றரில் காண்க.

**19.** $(x + 3)\ (x - 2) = x^2 + \square\ x - \square$ வெற்றுக் கூடுகளை நிரப்புக.

**20.** முக்கோணி ABC இன் பரப்பளவைக் காண்க



**கணிதம் - பகுதி II – தரம் 9**

- **முதலாம் வினாவிற்கும் ஏனைய 4 வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **முதலாம் வினாவிற்கு 16 புள்ளிகளும் ஏனைய வினா ஒன்றிற்கு 11 புள்ளியும் வழங்கப்படும்**

**01.** **(a)** நீங்கள் கற்றுக் கொண்ட எண் அடிகள் தொடர்பான விடயத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

**(i)** துவித எண்களின் இடப்பெறுமானங்களில் எண்கள் எவ்வாறு குறிக்கப்படும் என்பதை விளக்குக

**(ii)** அடி பத்திலுள்ள எண்ணில் இருக்ககூடிய இலக்கங்களின் எண்ணிக்கை யாது?

**(iii)** துவித எண்ணில் இருக்கக்கூடிய இலக்கங்கள் எவை?

**(b)** **(i)** 45 என்ற அடி பத்திலுள்ள எண்ணை ( தசம எண் ) அடி இரண்டிலுள்ள ( துவித எண் ) எண்ணாக மாற்றுக.

**(ii)** அத் துவித எண்ணை எண் சட்டம் ஒன்றில் குறிக்க

**(iii)** $110101_{\text{இரண்டு}}$ என்ற எண்ணைத் தசம எண்ணாகத் தருக.

**(iv)** பெறுமானம் காண்க. $1101_{\text{இரண்டு}} + 111_{\text{இரண்டு}}$

**(v)** பெறுமானம் காண்க. $1101_{\text{இரண்டு}} - 110_{\text{இரண்டு}}$

**02.** **(a)** ஒரு பக்க நீளம் $x$ மீற்றரைக் கொண்ட சதுர வடிவப் பூப்பாத்தி ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.




**(i)** இப்பூப்பாத்தியின் நீளமானது 3m இனால் அதிகரித்தும் அகலமானது 2m இனால் குறைத்தும் புதிய பூப்பாத்தி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அப் புதிய பாத்தியின் நீள அகலங்களை $x$ இன் அளவீடுகளுடன் பரும்படிப்படம் ஒன்றில் குறிக்க.

**(ii)** புதிய பாத்தியின் பரப்பளவுக்கான கோவையை எழுதிச் சுருக்குக.

**(b)** கீழேயுள்ள கோவைகளைக் காரணிப்படுத்துக.

**(i)** $x^2 - 9x + 20$

**(ii)** $16\ m^2 - n^2$

**03.** **(a)** தரப்பட்ட உருவைப் பயன்படுத்தி கீழேயுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.




**(i)** தரப்பட்ட உருவிலுள்ள சமாந்தரக் கோட்டுச் சோடிகளைப் பெயரிடுக..

**(ii)** இவ்வுருவிலுள்ள குறுக்கோடிகள் எத்தனை?

**(iii)** இச் சமாந்தரக் கோடுகளை குறுக்கோடிகள் சந்திப்பதால் உண்டாகும் மூன்று கோணங்களின் இயல்புகளைக் குறிப்பிடுக.

**(iv)** $x$ , y, z இனால் குறிக்கப்பட்ட கோணங்களின் பெறுமானங்களைக் காண்க.

**(b)** தரப்பட் உருவில் $A\hat{B}C = A\hat{D}C$ எனில்,
$E\hat{D}F = G\hat{B}H$ எனக் காட்டுக.




**04.** ஒருவரின் மாத வருமானத்தில் $\frac{1}{3}$ ஐ உணவுக்கும் $\frac{1}{4}$ ஐ வீட்டு வாடகைக்கும் செலவு செய்கிறார்.

**(i)** அவர் உணவுக்கும் வீட்டு வாடகைக்கும் செலவு செய்த பணம் மாத வருமானத்தின் என்ன பின்னமாகும்?

**(ii)** அவர் உணவுக்கும் வீட்டு வாடகைக்கும் செலவு செய்த பின் எஞ்சிய பணத்தில் $\frac{3}{5}$ ஐ வேறு தேவைக்கு செலவு செய்தார் எனில், வேறு தேவைக்குச் செலவு செய்த பணம் முழுவதன் என்ன பின்னம்?

**(iii)** மேலேயுள்ள செலவுகளுக்குப் பின்னர் அவர் மீதிப் பணத்தை வங்கியில் வைப்பிலிடுகின்றார். வங்கியில் வைப்பிலிட்ட பணம் அவரது வருமானத்தின் என்ன பின்னம் ஆகும்?

**(iv)** அவர் வங்கியில் ரூ 6000 ஐ வைப்பிலிட்டால், வருமானத்தைக் காண்க.

**05. (a)** நீர்த் தாங்கி ஒன்றின் நீளம் 1.6 m உம் அகலம் 1m உம் உயரம் 80 cm உம் ஆகும்.

**(i)** தாங்கியின் கனவளவை கன சென்ரிமீற்றரில் காண்க.

**(ii)** தாங்கியின் கொள்ளளவை லீற்றரில் காண்க.

**(iii)** ஒருவர் சாதாரணமாக ஒரு நாளுக்கு 80 லீற்றர் நிரைப் பயன்படுத்துவார் எனில், நான்கு பேரைக் கொண்ட வீடு ஒன்றிற்கு இத் தாங்கியிலுள்ள நீர் எத்தனை நாட்களுக்குப் போதுமானது எனக் காண்க.

**(b)** பால் சேகரிப்பு நிலையம் ஒன்றிற்கு ஒரு நாளில் சேகரிக்கும் பால் $0.5\ m^3$ ஆகும்.

**(i)** இப் பாலின் அளவை லீற்றரில் காண்க.?

**(ii)** இப் பாலினை 250 m*l* கொண்ட எத்தனை போத்தல்களில் அடைக்கலாம்?

**06. (a)** அலுமாரி ஒன்றின் உற்பத்திச் செலவு ரூ 30 000 ஆகும். ஊற்பத்தியாளர் 20% இலாபம் கிடைக்குமாறு அலுமாரிக்கு விலை குறித்து, உடன் பணத்திற்கு விற்கும் போது 2% கழிவுடன் விற்பனை செய்கின்றார்.

**(i)** அலுமாரியின் குறித்த விலை எவ்வளவு?

**(ii)** உடன் பணத்திற்கு அலுமாரியை விற்ற விலை என்ன?

**(iii)** உடன் பணத்திற்கு அலுமாரியை விற்பதால் கிடைக்கும் இலாப சதவீதத்தைக் காண்க.

**(b)** மேலேயுள்ள அலுமாரி வகையான ஐந்து அலுமாரிகளை ஒன்று ரூ 35000 இற்கு விற்பதற்கு உற்பத்தியாளனிடம் 5% தரகுப் பணம் அறவிடப்படுகிறது எனில், இக் கொடுக்கல் வாங்கல்களுக்கான தரகுப் பணத்தைக் காண்க.

**07.** போட்டியாளர் ஒருவர் மைதானம் ஒன்றில் முதல் நாள் 2 சுற்றுக்களும் இரண்டாம் நாள் 5 சுற்றுக்களும் என்றவாறு, அதற்கு அடுத்த நாள் முந்திய நாளை விட 3 சுற்றுக்கள் கூடுதலாக ஓடுவதன் மூலம் பயிற்சியில் ஈடுபடுகின்றார்.

**(i)** அவர் முதல் நான்கு நாட்களும் ஓடிய சுற்றுக்களின் எண்ணிக்கையை கோலமொன்றில் எழுதுக.

**(ii)** அக் கோலத்தின் முதல் உறுப்பையும் பொது வித்தியாசத்தையும் எழுதுக.

**(iii)** அக் கோலத்தின் பொது உறுப்புக்கான கோவையை $(T_n)$ பெறுக.

**(iv)** அவர் 10ஆம் நாள் ஓடிய சுற்றுக்களின் எண்ணிக்கையைக் காண்க.

**(v)** அவர் 20 சுற்றுக்களை எத்தனையாவது நாள் ஓடியிருப்பார்?